செய்தி வெளியீடு எண்: 416 நாள் : 19.08.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் சென்னை திருவான்மியூர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது விநியோகத்திட்ட கிடங்கு மற்றும் தரமணி நியாய விலை அங்காடிகள் ஆகியவற்றை 19.08.2015 இன்று காலை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி, மானிய விலையில் வழங்கப்படும் சர்க்கரை, கோதுமை மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பருப்பு வகைகள், பாமாயில் ஆகியவை, உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் ஒதுக்கீட்டின்படி, நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படுவதை மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார். அங்காடிகளுக்கு தேவையான அனைத்து வகை பொருள்களும் 100 சதவிகிதம் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்று கேட்டறிந்தார்.

கிடங்குகளிலிருந்து விடுவிக்கப்படும் பொருட்கள், தீவிர தர பரிசோதனைக்குப் பின்னரே நகர்வு செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சேமிப்பிலிருந்த அரிசி, பருப்பு வகைகள் முதலியவற்றின் மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்தார். மூட்டைகள் அனைத்தும், இயக்கப் பொறுப்பாளர்கள் (Movement Representative) முன்னிலையில் சமச்சீர் செய்து, ஒப்புதல் பெற்ற பின்னரே லாரிகளில் ஏற்றப்பட வேண்டுமென்றும் கிடங்கு அலுவலர்களை அறிவுறுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், லாரிகளில் ஏற்றப்பட்டிருந்த அரிசி மூட்டைகளை மறு எடை செய்து பரிசோதித்தார். மேலும் அங்காடிகளில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவைக்கேற்ப தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா

என்பதையும் கேட்டறிந்தார். ஆய்வின் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், குடும்ப அட்டைதாரர்கள் பொருட்கள் சரியான எடையுடனும், உரிய தரத்துடனும் சீரான முறையில் வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது அரசு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**